# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.19/2014

DW2– சிவக்குமார் நாள்:17.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை**:

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 வம்சாவளிப்பட்டியலில் கண்ட விவரங்கள் சரிதான். எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை என்அப்பா வழக்கறிஞருக்கு சொல்லியுள்ளார். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்அப்பா, என்பெரியப்பா மற்றும் பாட்டி சூடாமணி ஆகியோர்களுக்கிடையே நடைபெற்ற பி.வா.சா.ஆ.4 பாகம் பற்றிய விவங்கள் எனக்கு தெரியாது. அதில் கண்ட சொத்துக்கள் சூடாமணி பெயரில் வாங்கப்பட்டவை அல்ல. பி.வா.சா.ஆ.4ல் கண்ட சொத்துக்கள் முத்துவெங்கடாசல பூர்விக சொத்துக்கள் என்றும், பி.வா.சா.ஆ.1, 2, 3 ஆவணங்கள் பெயரளவில் ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்க்கவில்லை. 13.06.1968ம் தேதி வா.சா.ஆ.3 மூலம் மேற்படி மூவரும் சொத்தை காளிசெட்டி மனைவி நாச்சம்மாளுக்கு விற்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தை நான் பார்க்கவில்லை. அந்த பத்திரத்தில் வேறு நிலம் வாங்குவதற்காக அதை விற்பதாக சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா விற்ற விவரத்தை சொன்னார். அந்த பணத்தை வைத்து 06.08.1968ம் தேதி 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையில் கண்ட ஒரு சொத்தான ஆயாகோவில் தெருவில் உள்ள ஒரு வீட்டை வா.சா.ஆ.5 ன் மூலம் 1971ம் வருடம் பங்காருஅம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தேதியில் ஆயாகோவில் தெருவில் உள்ள ஒரு காலிமனை மேற்படி மூவரும் சேர்ந்து நல்லம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த பணத்தை வைத்தும் பி.வா.சா.ஆ.5, 6, 7, 8 மூலம் 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4ல் கண்ட சொத்துக்களை விற்று அதன்மூலம் கிடைத்த பணத்தை வைத்து 1ம் பிரதிவாதியான சின்னராஜி பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் பொதுகுடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. என்தகப்பனார் பெயரில் மேற்படி சொத்துக்கள் வாங்குவதற்கு அவருக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. என்அப்பா அரசு வேலை செய்யவில்லை. தொழில் எதுவும் செய்யவில்லை. விவசாய கூலி வேலை செய்தார். வாதி 3ம்வகுப்பு வரை படித்துள்ளார். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். என்சகோதரிகள் 7,8 ம் வகுப்பு

வரை படித்துள்ளார்கள். பொதுகுடும்ப சொத்தான 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களில் வாதி தான் பராமரித்து விவசாயம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. வாதியின் உழைப்பில் தான் என்னையும், என் சகோதரிகளையும் படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. என்தகப்பனார் குடும்பத்தை கவனிக்காமல் பொது சேவை மற்றும் பொது பிரச்சனைகளை கவனித்து காலம் கடத்தினார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 முதல் 13 ஆவணங்களை நான் பார்க்கவில்லை. என்அம்மாவிற்கு சீதனமாக வந்த சொத்தின் ஒருபகுதியை பி.வா.சா.ஆ.9 ஆவணம் மூலம் என்அப்பாவிற்கு தானபத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் தானபத்திரம் எழுதிகொடுத்துள்ளார். அது சீதன சொத்தல்ல. பி.வா.சா.ஆ.10 ல் கண்ட சொத்தை பொதுகுடும்ப வருமானம் மற்றும் வாதியின் உழைப்பின் மூலம் வந்த வருமானத்தை வைத்து வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.11 ஆவணம் பற்றிய விவங்கள் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் காமாட்சியம்மாளிடம் மோசடியாக எழுதிவாங்கிய ஆவணம் என்றால் சரியல்ல. காமாட்சியம்மாளின் மகன்கள் சொத்தை மோசடியாக எழுதி வாங்கிவிட்டதாக கூறி அவர்கள் தான் சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றும் என்அப்பா மற்றும் சித்தப்பா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை பொருத்து சேலத்தை சேர்ந்த ஒருவரிடம் என்அப்பா கிரய ஒப்பந்தம் செய்துகொண்ட விவரம் என்அப்பா சொல்லி தெரியும். சொத்தில் பிரச்சனை உள்ளது என்றும், சொத்தை வாங்கமுடியாது என்று கூறி கொடுத்த அட்வான்சை திரும்ப கேட்டு பிரச்சனை செய்த விவரம் என்அப்பா சொல்லி தெரியும். அந்த முன்பணமானது பொதுகுடும்ப பணத்தில் இருந்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றிய விவரம் தெரியாது. முன்பணம் ரூ.3,000/- என்று என்அப்பா சொன்னார். பணம் கொடுத்தாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. சேலத்துகாரார் அந்த சொத்தை எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு என்அப்பா, சித்தப்பா, மற்றும் காமாட்சியம்மாளின் மகன்கள் அனைவரும் சேர்ந்து சொத்தை கிரையம் கொடுத்து பணத்தை பங்கு பிரித்து கொண்டார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. சூடாமணி இறக்கும்வரை அவரும், என்அப்பா மற்றும் பெரியப்பா ஒரே குடும்பமாக இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பொது குடும்ப வருமானத்தை வைத்து வா.சா.ஆ.14 மூலம் 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சொத்து வாங்குவதற்கு நான் பணம் கொடுத்தேன் என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து ரூ.1,80,000/-க்கு வாங்கப்பட்டது. பி.வா.சா.ஆ.28

கணக்கானது என் மனைவி பெயரில் 2005ம் ஆண்டு தொடங்கப்பட்ட NRI கணக்கு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.29 கணக்கு என்மனைவி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அங்காளம்மன் நகரில் 5மனைகளை என்பெயரிலும், வாதி பெயரிலும் 2007ம் ஆண்டு கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் பொதுகுடும்ப பூர்விக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை வைத்து வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. மேற்படி 5 மனைகள் ரூ.3லட்சத்திற்கு வாங்கப்பட்டது. ரூ.5இலட்சத்திற்கு அவை வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அசோக் நகரில் 12.04.2007ம் தேதி பொதுகுடும்ப வருமானத்தை வைத்து 1ம் பிரதிவாதி பெயரில் 3 வீட்டு மனைகள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பணத்தை வைத்து வாங்கப்பட்டது. ரூ.4,50,000/-ற்கு வாங்கப்பட்டது. என்னுடைய வருமானத்தை வைத்து மேற்படி வீட்டு மனைகள் வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதிலுள்ள ஒருவீட்டுமனையை என்அப்பா தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். தவறாக எழுதிகொடுத்துள்ளார். அந்த வீட்டுமனையை மோசடியாக என்அப்பா மீண்டும் எழுதிவாங்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. 29.08.2007ம் தேதி வா.சா.ஆ.19ன் மூலம் என்மனைவி பெயரில் வாங்கப்பட்ட சொத்து பொதுகுடும்ப வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20, 21 ஆகிய ஆவணங்கள் மூலம் என்பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் பொதுகுடும்ப வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 மூலம் என்மனைவி பெயரில் ஏற்பட்ட பத்திரம் ரூ.1,50,000/-ற்கு ஏற்பட்டதாகும். வா.சா.ஆ.20, 21 மூலம் என்பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் மொத்தம் ரூ.3லட்சத்திற்கு வாங்கப்பட்ட சொத்து. ஒருவீட்டு மனை ரூ.1,70,000/-ற்கு பூர்விக சொத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.22 மூலம் வாங்கப்பட்ட மெத்தை வீடு ரூ.11 லட்சத்திற்கு வாங்கப்பட்டது. வீடு கட்டிக்கொண்டிருக்கும்போது ரூ.2லட்சத்திற்கு அடிமனை வாங்கப்பட்டது. வீடு மெத்தைவீடாக வாங்கப்பட்டது என்றும், அதன்மதிப்பு ரூ.37லட்சம் என்றால் சரியல்ல. பூர்விக குடும்ப நகைகளை அடகுவைத்தும் மற்றும் வாலீஸ்வரம் அத்தை மகன் ரவி, இரக்குடி என்னுடைய மாமியாரின் சம்மந்தியிடம் இருந்தும் மற்றும் என்அம்மா வழி அக்காவான அமுதாவிடமும், 3ம் பிரதிவாதி சுகுணாவிடமும் வாங்கிய கடன் மூலமும் மற்றும் வாதி வியாபாரம் செய்து வைத்திருந்த பணத்தை வைத்தும் மற்றும் அங்காளம்மன் நகரில் இருந்த 5 பிளாட்டுகளை விற்பனை செய்வதற்கு வாங்கிய முன்பணத்தை வைத்தும் மேற்படி சொத்து கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அங்காளம்மன்

நகரில் உள்ள வீட்டுமனை விற்பதற்கு வாதி பெயருக்கு நான் அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் சொத்தை விற்பதற்கும் மற்றும் என்பெயரில் சொத்தை வாங்குவற்கும் அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேன்.

**குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.